## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 2-1 - வானவர்
## (திருவேங்கடம் 4)

1048 * வானவர் தங்கள் சிந்தை போல * என் நெஞ்சமே! இனிது வந்து * மாதவ
மானவர் தங்கள் சிந்தை * அமர்ந்துறைகின்ற எந்தை **
கானவரிடு காரகில் புகை * ஓங்கு வேங்கடம் மேவி * மாண் குறள்
ஆன அந்தணற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 1

1049 உறவு சுற்றம் என்று ஒன்றிலா * ஒருவன் உகந்தவர் தம்மை * மண்மிசைப்
பிறவியே கெடுப்பான் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
குறவர் மாதர்களோடு * வண்டு குறிஞ்சி மருள் இசை பாடும் * வேங்கடத்து
அறவ நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 2

1050 இண்டையாயின கொண்டு * தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் * -
வானிடைக்
கொண்டு போயிடவும் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
வண்டு வாழ் வட வேங்கட மலை * கோயில் கொண்டு அதனோடும் * மீமிசை
அண்டம் ஆண்டிருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 3

1051 பாவியாது செய்தாய் * என் நெஞ்சமே! பண்டு தொண்டு செய்தாரை * -
மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய் * விசும்பேற வைக்கும் எந்தை **
கோவி[1] நாயகன் கொண்டலுந்துயர் * வேங்கட மலை ஆண்டு * வானவர்
ஆவியாய் இருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 4

1052 பொங்கு போதியும் பிண்டியுமுடைப் * புத்தர் நோன்பியர் பள்ளியுள்ளுறை *
தங்கள் தேவரும் தாங்களுமேயாக * என் நெஞ்சம் என்பாய்! **
எங்கும் வானவர் தானவர் நிறைந்தேத்தும் * வேங்கடம் மேவி நின்றருள் *
அங்கணாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 5

1053 துவரியாடையர் மட்டையர் * சமண் தொண்டர்கள் மண்டியுண்டு பின்னரும் *
தமரும் தாங்களுமே தடிக்க * என் நெஞ்சம் என்பாய்! **
கவரி மாக்கணம் சேரும் * வேங்கடம் கோயில் கொண்ட கண்ணார் -
விசும்பிடை *
அமர நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 6

1054 தருக்கினால் சமண் செய்து * சோறு தண் தயிரினால் திரளை * மிடற்றிடை
நெருக்குவார் அலக்கண் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
மருட்கள் வண்டுகள் பாடும் * வேங்கடம் கோயில் கொண்டு அதனோடும் * -
வானிடை

[1] கோவல்

அருக்கன் மேவி நிற்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 7

1055 சேயன் அணியன் சிறியன் பெரியன் என்பதும் * சிலர் பேசக் கேட்டிருந்
தே * என் நெஞ்சம் என்பாய்! * எனக்கு ஒன்று சொல்லாதே **
வேய்கள் நின்று வெண்முத்தமே சொரி * வேங்கட மலை கோயில் மேவிய *
ஆய[2] நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 8

1056 கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய் * என் நெஞ்சம் என்பாய்! துணிந்து -
கேள் *
பாடி ஆடிப் பலரும் * பணிந்தேத்திக் காண்கிலா [3] **
ஆடு தாமரையோனும் ஈசனும் * அமரர் கோனும் நின்றேத்தும் * வேங்கடத்து
ஆடு கூத்தனுக்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 9

1057 * மின்னு மாமுகில் மேவு * தண் திருவேங்கட மலை கோயில் மேவிய *
அன்னமாய் நிகழ்ந்த * அமரர் பெருமானை **
கன்னி மாமதிள் மங்கையர் கலிகன்றி * இன்தமிழால் உரைத்த * இம்
மன்னு பாடல் வல்லார்க்கு * இடமாகும் வானுலகே 10

**அடிவரவு:** வானவர் உறவு இண்டை பாவியாது பொங்கு துவரி தருக்கினால்
சேயன் கூடி மின்னு காசையாடை

[2] ஆயர்
[3] காண்கிலார்